Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்:- 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 27 | ( 09 - 05 - 1992 ) | சனிக்கிழமை | ஓசை: 81


## தாதி மீது சிங்களவர் தாக்கு டாக்டர்கள் வேலை நிறுத்தம்

சிங்களவர்களால் திருக்கோணமலை வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதி ஒருவர் தாக்கப்பட்டதையடுத்து டாக்டர்களும், ஊழியர்களும் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது பற்றி மேலும் தெரியவருவதாவது திருக்கோணமலை மட்கோ பகுதியில் வசிக்கும் ஐந்துவயதுச் சிறுமி ஒருவர் கடந்த செவ்வாயன்றுஇரவு பாம்புக்கடிக்கு இலக்கானதையடுத்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். ஆனால் விஷம் உடலில்முற்றியதால் அச்சிறுமியைவைத்தியசாலை டாக்டர்களால் காப்பாற்ற முடியவில்லைஇதனையடுத்துசம்பந்தப்பட்ட தாதியைவெளியில் வைத்து தகாத வார்த்தைகளால் திட்டிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் இரு பெரும் மோதல்கள்

# 14 இராணுவத்தினர் பலி: பலர் காயம்

## இங்கிரிய மடுவில் கடும் சண்டை

## முற்றுகை முயற்சி முறியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இங்கிரிய மடு வெட்டை என்ற இடத்தில் இருந்த விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றிவளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரு முனைகளில் கடும் மோதல் ஏற்பட்டது. விமானப் படையின் உதவியுடன் சிறிலங்கா இராணுவம் மேற் கொண்ட இம் முற்றுகை முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது. இம் மோதலில் எட்டு புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இராணுவத்தரப்பில் நான்கு பேர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர். ஆயுதங்கள் சில விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம் மோதல் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

நேற்றுமுன்தினம்அதிகாலை குடும்பிமலை, கல்லிச்சை முகாம்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர், இங்கிரியமடு வெட்டை என்ற இடத்திலிருந்த விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைக்க முயன்றனர். அப்பொழுது சுற்றி வளைக்க முயன்றஇராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் வேறொரு அணியொன்று தாக்குதல் ஒன்றைத் தொடுத்தது இம் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், முகாமிற்குள் இருந்த புலிகளின் வேறொரு அணியினரும் மற்றுமொரு தாக்குதலைத் தொடுத்தனர்.

காலை 6.25 மணியளவில், ஆரம்பமாகிய இம் மோதல் சுமார் 8.00 மணி வரையிலும் நீடித்தது இம்மோதலின் போதுஇராணுவத்தினருக்குத் துணையாக நான்கு குண்டு வீச்சு விமானங்களும், இரண்டு உலங்கு வானூர்திகளும் இடைவிடாது தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தன. தாக்குதலில் ஈடுபட்ட விமானங்கள் சுமார் 26 குண்டுகள் வரை வீசியது உலங்கு வானூர்திகள் 50 கலிபர் வேட்டுக்களைத்தீர்த்த வண்ணம் இருந்தன.

இந் நிலையில் நடைபெற்ற உக்கிர மோதல்களின் பின்னர் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்குடுகொடுக்கமுடியாதஇராணுவம் முற்றுகைமுயற்சிகளை கைவிட்டு முகாம் திரும்பியது இம் மோதல்களில் குறைந்தது நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயமும் அடைந்தனர்.

## எட்டு புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு) ... வின் முகாமை முற்றுகையிட ... டித்த மோதலில் விடுதலைப் ... ★ வீரவேங்கை (சுந்தர்)

## கதிரவெளியில் புலிகளின் துணிகர அதிரடித் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர், புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

நேற்று முன்தினம் கதிரவெளி என்னும் இடத்தை முற்றுகையிட்டு விட்டு முகாம் திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகளின் அதிரடிப் பிரிவினர் வழி மடக்கித் துணிகரத்தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர் மாலை 4.00 மணியளவில் ஆரம்பித்த இம் மோதல் 5.30 மணிவரையும் இடம் பெற்றது.

இம் மோதலில் கப்டன் தரத்திலுள்ள ஒரு இராணுவ அதிகாரி உட்பட பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லைஎன்பது குறிப்பிடத்தக்கதாகும்,

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கதிரவெளி எனுமிடத்தை முற்றுகையிட்டுத் திரும்பிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையினர் மேற் கொண்ட தாக்குதலில் பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ 81எம்.எம்.மோட்டர் - 01
★ 81 எம். எம். ஷெல் - 11
★ ரி. 56-2 ரக துப்பாக்கிகள் - 05
★ ரி. 56 புதிய ரக துப்பாக்கி - 01
★ 60 எம்.எம்.ஷெல் - 07
★ ஐ. எம். ரவைகள் -1537
★ ஏ.கே. ஹோல்சர்- - 06
★ பி.கே.லிங்குடன்ரவை-500
★ ஜே. ஆர். ரக கைக்குண்டு - 02
★ புகைக் குண்டு - 02
★ கொம்பாஸ் - 01
★ 81 எம்.எம். ஷெல்பூண்டல் - 01 பெட்டி
★ ரெயின் கோட் - 02
★ புளட் புருவ் ஜக்கட் - 01
★ ,, - 08 சோடி

## வீரவணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இங்கிரியமடு வெட்டையில் விடுதலைப்புலிக ளின் முகாமை முற்றுகையிட முற்பட்ட சிறிலங்கா இராணு வத்தினரின் முயற்சியை முறிய டித்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 8 புலிகள் வீரச்சாவடைந்தனர்.

★ மேஜர் சித்தா (கந்தையா விஸ்வலிங்கம் சந்தை வீதி, கிரான்)

★ கப்டன் (மாட்டின்) மயில வன் (குமாரவேல் கனேசராசா வடமுனை, ஊத்துச்சேனை, வெலிகந்த)

★ 2ஆம் லெப். (மோகன்) கேதாரராஜா-(சுப்பிரமணியம் விஜயகுமார் - சந்தை வீதி கிரான்)

★ 2ஆம் லெப் விக்கினா (சிவ லிங்கம் -புவனேந்திரராஜா- ஆறுமுகத்தான் குடியிருப்பு ஏறவூர்)

★ வீரவேங்கை (சுந்தர்) இறைகுமார்-(சாமித்தம்பி சந் திரசேகரம்!- மண்டூர், மட்டு நகர்)

★ வீரவேங்கை (மகிந்தன்) மகிந்தகுமார் (பொன்னையா ராஜன்-கருவன் கேணி வந் தாறு மூலை)

★ வீரவேங்கை சுந்தரலிங்கம் (கிட்ணப்பிள்ளைஉதயகுமார்- மன்னம்பிட்டி- மட்டு நகர்)

★ வீரவேங்கை சாந்தகுமார் (விநாயகமூர்த்தி யோகராசா- காளிகோவில் வீதி-கிரான்)

வீரச்சாவடைந்த இவ் வேங் கைகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இங்கிரியமடு வெட்டை எனுமிடத்தில் விடு தலைப் புலிகளின் முகாமை முற்றுகையிட முற்பட்ட சிறி லங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்கு தலை மேற் கொண்டு அவர் களிடமிருந்து சில ஆயுதங்க ளைக் கைப்பற்றினர். இத் தாக்குதலின் போது விடு தலைப் புலிகளால் கைப்பற் பட்ட ஆயுதங்களின் விபரங் கள் வருமாறு.

★ 60 எம். எம். மொமான் டோ மோட்டர் :- 01
★ 60 எம். எம். ஷெல் :- 03
★ ரி.56-2 ரக துப்பாக்கி :- 01
★ ரி 56 ரக மகசின் :- 07
★ ஏ. கே. ஹோல்சர் :- 01
★ கிட்பாக் :- 02
★ சூ :- 01
★ தொப்பி :- 01

## பயணி மீது துப்பாக்கிச் சூடு

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த பயணி ஒருவர் தற்போது வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின் றார்.

சமீபத்தில், யாழ் வவுனியா வீதி வழியாக வவுனியா நக ருக்கு செல்லமுயன்ற பயணி கள் மீது இராணுவம் பேயாடி கூழாங்குளம் பகுதியில் நின்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் தொடர்ந்தால் பொருளாதாரப் பாதிப்பு

### -பெஸ்டஸ் பெரேரா

(கண்டி)

வடக்கு-கிழக்குப் பிரச்சினை க்கு தீர்வு காணப்படாமல் நீடிக்கப்படுமானால் நாட்டின் பொருளாதாரம் அதனால் வெகுவாகப் பாதிக்கப்பட லாம் என கண்டி பேராதனை விவசாய ஆராய்ச்சி அபிவிரு த்தி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கல ந்து கொண்டு உரையாற்றிய பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ் டஸ் பெரேரா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகை யில் வடக்கு - கிழக்கு பிரச் சினை காரணமாக நாட்டில் பொருளாதாரம் அடிக்கடி பாதிக்கப்படுகிறது இதன் பொருட்டு பெருமளவு பண த்தை அரசாங்கம் பாதுகாப்

[ 4ஆம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கிப் பிரயோகம்

மண்டைதீவுப் பகுதியிலிருக் கும் சிறிலங்கா இராணுவத்தி னர்நேற்றுயாழ் நகரைநோக்கி வந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் எட்டரை மணியிலிருந்து நடைபெற்ற இத் துப்பாக்கிப் பிரயோகத் தின் போது வெளிச்சக் குண்டு களும் ஏவப்பட்டுள்ளன.

## பாடசாலையில் பொலிஸ் மாணவர் அவதி

[அம்பாறை]

வீரமுனை பாடசாலைக்கட் டிடத்தில் பொலிசார் முகா மிட்டிருப்பதால் மீளக் குடியே றிய அகதிகளின் குடும்பங்க ளைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி வாய்ப்பை இழந்திருப்ப தாக அங்கிருந்து வரும் தகவல் கள் தெரிவிக்கின்றன. எனவே பாடசாலை அமைக்க வேறி டம் ஒன்றையாவது ஒதுக்கித் தருமாறும், ஒரு ஓலைக்கொட் டிலையாவது அமைத்து தரு மாறும் அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புலிகளை தடை செய்யாவிடில் அரசிற்கு எதிராக போராட்டம்

### - வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமை ப்பை மே 21ஆம் திகதிக்குள் தடை செய்யாவிடில் தமிழக காங்கிரஸ் கட்சி எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம் பிக்கும் என்று தமிழக பிரி வின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திஎச்சரித்துள்ளார்.

கடந்த வருடம் மே 21ஆம் திகதிதான் ராஜீவ் காந்தி கொலை செய்யப் பட்டார் என்றும்,

கட்சி உறுப்பினர்களின்சார் பில் இந்த அறிக்கையை வெளியிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்,

போதிய ஆதாரங்கள் கிடைக்கப் பெறாமல் விடுத லைப் புலிகளை தடைசெய்ய முடியாதென உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளதையும்கண்டித்தார்



மரகதம்

விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவைச் சேந்த வீர வேங்கை மரகதம் (சாரதா தேவி ஏரம்ப மூர்த்தி - அல் வாய் மேற்கு அல்வாய்) சுக யீனம் காரணமாக கடந்த ஆறாம் திகதி மரணமடைந் தார்; இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக் கொள் கின்றனர்.

★ 60 எம்.எம்.ஷெல் - 07
★ 60 எம்.எம்.ஸ்கோப் - 01
★ சூ - 08 சோடி
★ ஏ. கே. மகசின் - 27

## கொழும்பில் துப்பாக்கிகள் வைத்திருந்த சுவிஸ் பிரஜை கைது

(கொழும்பு)

கொழும்பில் சுவிட்சலாந்து பிரஜை ஒருவர் துப்பாக்கிக ளோடும் வெடிமருந்துகளோ டும் கைது செய்யப்பட்டு தடு த்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறி யுள்ளன. 1990ஆம் ஆண்டு முதல் தமது மனைவியுடன் கொழும்பில் வசித்துவந்த மேற்படி நபரிடமிருந்து இரு பத்தைந்து நவீனரக துப்பா க்கிகளும், வெடிமருந்துகளும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டிருப்பதாக பொலிஸ் வட் டாரங்கள் அறிவித்துள்ளன.

## புதிதாக இடம்பெயர்ந்தோருக்கு பாலம்பிட்டி அகதிமுகாமில் தங்க அனுமதி மறுப்பு

### 2,000 மக்கள் அவதி

(மன்னார்)

மன்னாரில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள அகதி முகாமில் இடம் பெயர்ந்த மக்கள் குடிய மர அனுமதிக்கப்படவில்லை. இரண்டாயிரத்துக்கும் மேற் பட்ட தமிழ் மக்கள் இருப்பிட மின்றி பெரும் அவதிப் படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன

அண்மையில் இராணுவத்தி னர் மேற்கொண்ட பச்சைசப் பட்டி இராணுவ நடவடிக்கை யின் போது மட்டும் பத்தாயி ரத்துக்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்திருந்தனர். இடம்பெயர்ந்தவர்களில் குறிப்பிட்ட சில தொகையினர் மட்டுமே மடுவிலுள்ள அகதி கள் முகாமில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கு தங்க அனுமதிக்கப்பட்ட அகதி மக்களில் பலரும் பாலம் பிட்டி பகுதி அகதிகள் முகா மிற்கு சென்றனர்.

இந்தியாவிலிருந்து திரும்பு பவர்களுக்காகவே காடுகள் அழிக்கப்பட்டு இம்முகாம் அமைக்கப்படுவதாகத் தெரி வித்த ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தை சேர்ந்த அதிகாரிகள் மன்னார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாயகம் திரும்பிய அகதிகள் இராணுவத்தால் இம்சை

[வவுனியா]

தமிழகத்திலிருந்துவந்து வவு னியா அகதி முகாம்களில் தங் கியுள்ள தமிழ் அகதி மக்கள் மீது இராணுவம்மற்றும்துரோ கக் குழுக்கள் கெடுபிடி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இந்தத்தமிழ் அகதிகள் அடிப் படை வசதிகள் எதுவுமற்று அல்லல் படுவது ஒருபுறமிருக்க சிறிலங்கா இராணுவத்தாலும் துரோகக் குழுக்களாலும் அச் சுறுத்தப்பட்டு அவதிப் படுகின் றனர்.

வவுனியா - யாழ். வீதியில் அமைந்துள்ள விவசாயப்பாட சாலை அகதி முகாமிலும், வவு னியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் அகதி முகாமிலும் நூற்றுக்கணக் கான அகதி மக்கள் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

இந்த அகதி முகாம்களில் உள்ளஇளைஞர்கள்இராணுவ உளவாளிகளினால் விசார ணைக்குட்படுத்தப்பட்டுகைது செய்யப்படுகின்றனர்

இரவு வேளைகளில் இம் முகாம்களுக்கு வரும் இனந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-4-1992 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட சழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (சி/ 4381)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/ 4382)

### தவறி விட்டது

4-5-1992 அன்று விஸ்வரட்ணம் ரவீந்திரன் 510062116 V இலக்கமுடைய அடையாள அட்டையும், சிறு தொகைப் பணமும் அடங்கிய பேஸ் கொம்படியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (2552)

## ஒய்வு பெற்ற ஊழியருக்கு சுகாதார சலுகை

[கொழும்பு]

அகில இலங்கை ஒய்வுபெற்ற அரச ஊழியர் சங்கம் எடுத்த முயற்சியினால் ஒய்வு பெற்ற அரசஊழியர்களுக்கு ஒரு சுகாதார சலுகையை அரசு ஏற்படுத்தியுள்ளது.

ஆயுர்வேத இலவச ஆஸ்பத்திரிகளில் கியூவில் நிற்காமல் உள்ளே சென்று மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளும் முன்னுரிமை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இச் சலுகையைப் பெறுவதற்கு ஒய்வூதியம் தொடர்பான ஆதாரமொன்றைக் காட்டினால் போதும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆங்கில மருந்து பெறுவதற்கும் கொழும்புப்பகுதி ஆஸ்பத்திரிகளிலும் இச் சலுகை வழங்கப்பட்டுள்ளதாம்.

## தமிழ்ப் பெண்கள் மீது திரவகம் வீச்சு

(ஹாலி - எல)

லுணுகலையில் பெண்கள் சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொண்ட மூன்றுதமிழ் பெண்களிடம் விஷமத்தனம் செய்த சம்பவம் பற்றி லுணுகலைப் பொலிஸ் விசாரணை செய்து வருகிறது.

## கம்பஹா விளக்கமறியலில் கைதிகள் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

கம்பஹா விளக்கமறியல் சிறையில் வைக்கப்பட்டிருந்த நான்கு விளக்கமறியல் கைதிகள் தப்பியோடி விட்டனர். கம்பஹா பொலிசார் தேடி வருகின்றனர்.

இதே வேளை, ஞாயிறன்று பெலவத்த தடுப்பு முகாமிலிருந்து தப்பியோடிய இருவர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்தார். மற்றவர் காயப்பட்டார்.

உயிரிழந்த 28 வயதான தம்மிக்கா பிரியந்தா பெல்வத்த தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட முதல் சந்தேக நபராவர். பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தை ஆட்சேபித்து முகாமில் தடுப்புக் காவலிலிருக்கும் 945 பேரும் உண்ணாவிரதம் இருந்தனர். தொடர்ந்து மூன்று நாள்களுக்கு அவர்கள் அக்கமும் அனுஷ்டித்தனர்.

## வெளிநாடுகளில் வேலை செய்வோருக்கென விசேட சேமிப்பு திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களுக்கென தேசிய சேமிப்பு வங்கி விசேட சேமிப்புத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

ஐந்து ரூபாயுடன் இந்தசேமிப்புக் கணக்கை ஆரம்பிக்க முடியுமெனவும், இந்தக் கணக்கில் வைப்புச் செய்வதற்கான பணத்தை வெளிநாட்டில் உள்ளவர்கள் காசோலையாக அல்லது வங்கி உண்டியலாக அனுப்பி வைக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கணக்கில் இருந்து அவர்கள் தமது குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் பணத்தை வழங்க முடியுமெனவும் கணக்கிலுள்ள பணத்திற்கு பதினான்கு சதவீத வட்டி வழங்கப்படும் என்றும், நாடு திரும்பியதும் அப்போதைய டொலர் விகிதாசாரத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி பொருள்கள்மீது விலையுயர்வு இல்லை

வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மா, பெற்றோலிய உற்பத்திப் பொருள்கள் மற்றும் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கும் யோசனைகள் எதுவும் அரசுக்கு இல்லையென சிறிலங்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹரோல்ட் ஹெரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவற்றின் விலைகள் வெளிநாட்டு சந்தைகளைப் பொறுத்தே ஏற்றி இறக்கப்படுகின்றன என்றும், ஆனால் இவற்றின் விலைகளை அதிகரிக்கும் யோசனைகள் எதுவும் அரசாங்கத்தின் முன் வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி

(மயில்வாகனம்)

அன்னையின் கையில் 07-06-1950 — இறைவன் கையில் 07-05-1988

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையில் உங்களை இழந்தோம் - மனம் துடித்தோம். அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்து விட்டு அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீர்களே! நான்கு ஆண்டுகள் உருண்டோடிப் போய் விட்ட போதினிலும், அன்பெனும் அமுதினிலே நீராட்டி அறிவூட்டிக் கொவ்வை இதழ்களால் கொட்டும் தேன்மொழியை இனி எப்போ கேட்டிடுவோம்? நாளெல்லாம் ஆண்டுகளாக உருண்டோடி மறைந்தாலும் தாயே! உங்கள் அழகிய திருவுருவம் எங்கள் நெஞ்சத்தில் என்றும் அணையாத ...

## முகாமையாளர்கள் தேவை


பிரதேச ரீதியாக இயங்கிக் கொண்டிருக்கும் உணவு பதனிடல் நிலையங்களில் முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் உணவு பதனிடலில் முன் அனுபவம் உள்ளவர்களாகவும், 30- 45 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத்திகதி 20/ 05/ 92.

விளம்பர இல 156
மே/ பா. ஈழநாதம்
(சி. 4388)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
27.11.1970
மறைவு
09.05.1988

### கனகரத்தினம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்)

(யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்)

ஆண்டு நான்கு சென்றதையா
ஆறவில்லை நம் துயரம்
காலன் வந்துன்னை
காற்றாய் மறைத்திட்டான்
கனவிலும் நினைவிலும் உன்
களங்கமற்ற முகம் தோன்றுதையா
தனிமையில் நிற்கின்றோம்
தவிக்கின்றோம் உன் நினைவால்
ஆறுதல் அடைவது உன் நிழற்படம் கண்டு

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கும்
பெற்றோர்; கனகரத்தினம் கலாவதி
சகோதர சகோதரிகள் விஜித்தா பாலேந்திரன்
திருமதி சசி ஸ்ரீதரன், மருமகன் செந்தூரன்

## நினைவு கூருகின்றோம்...

### 1992-05-09

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் உடுப்பிட்டியில் இராணுவ அதிகாரி மென்டிஸ்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**நித்தி** (கந்தையா அபிமன்னசிங்கம் - இலைந்தைக் காடு, வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதி மீது முற்றுகையை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் பரவலாகவும், பொலிகண்டி நூல்நிலையத்தினுள் அடைத்து வைத்து - குண்டுவைத்தும் படுகொலை செய்யப்பட்ட 90 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு ...ச்சாயில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். நிதி/ராமேஸ்வரன்** (முருகேசபிள்ளை ராமேஸ்வரன் - அல்லாரை தெற்கு, மீசாலை)

1989 ஆம் ஆண்டு மயிலிட்டியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் -

**சோதி** (கனகசபை சண்முகசோதி தையிட்டி, காங்கேசன்துறை)

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை, கந்தளாய்ப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**லெப். ஜனகன்** (கதிர்காமத்தம்பி செல்வரட்ணம், தம்பலகமம், திருக்கோணமலை)

வவுனியா, கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**மனோஜ்** (மருதங்கேணி, யாழ்ப்பாணம்)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அமல்** (வில்லிராஜ் றொபேட் - 60/4, சொலமன் வீதி, யாழ்ப்பாணம்)

**பெருமாள்** (பரமகுரு தெய்வசீலன் - இன்பருட்டி பருத்தித்துறை)

அம்பாறை/ அக்கரைப்பற்று, பனங்காட்டுப்பகுதியில் முகாமின் முன்பாகவுள்ள வீதியால் சென்றுகொண்டிருந்த பொழுது சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட கொம்மாதுறை, சந்தைவீதியைச்சேர்ந்த தமிழ்ப்பெண் - மற்றும் மாவடி வேம்பைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**

செய்து வருகிறது.

போட்டியின்போது உடலில் அரிப்பை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் மீது ஏதோ ஒரு திரவகம் ஊற்றப்பட்டதால் அவர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர்.

தீபமாய் ஒளி வீசிக்கொண்டேயிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலூர் - 4

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள்

(2549)

மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

ச. விஜிதா,
441, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(2527)

மக்கள் முன்னணி

(சி/4386)


"PRACTICE MAKES ONE PERFECT"

# பயிற்சிப் பரீட்சைகள்

## ஆரம்பம்: 10. 05. 92

★ ஆண்டு 5 (புலமைப்பரிசில்)

August 1992

ஒவ்வொரு மாதமும் 2 ஆவது, 4 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1 மணிக்கு நடத்தப்படும்.

★ O/L Dec. 1992

விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் பகுதி I & II, ஒவ்வொரு மாதமும் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படும்.

★ A/L Aug. 1992

முதலாவது வியாழக்கிழமை—
*Physics* —*I & II*

இரண்டாவது வியாழக்கிழமை —
*Chemistry* —*I & II*

மூன்றாவது வியாழக்கிழமை —
*Botany* —*I & II*
*Pure Maths* —*I & II*

நான்காவது வியாழக்கிழமை
*Zoology* —*I & II*
*Applied* —*I & II*

★ இப்பரீட்சைகளுக்கு தோற்ற வசதியில்லாதவர்கள், வினாத்தாள்களை வீட்டில் வைத்து, விடையளித்துத் தந்தால், இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

Examination Unit

**BOND**

Institutes

*58, A, Stanley Road*
*Jaffna*

(சி/ 4383)



# பேக்கரிப் பயிற்சி நெறி

மேற்படி பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியுள்ளோரிடமிருந்து கோரப்படுகின்றது.

தகைமை : ஜி. சி. ஈ. (சாதாரண தரம்) படித்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை : 18 முதல் 24 வரை

பயிற்சிக் காலம் : 6 மாதங்கள்

விண்ணப்பங்கள் யாவும் கீழ்வரும் முகவரிக்கு 25 - 05 - 92 க்கு முதல் அனுப்பவும்.

முக்கியகுறிப்பு:

1. பேக்கரி சம்பந்தமான சகல தொழில் நுட்பங்களும் கற்பிக்கப்படும்.
2. பயிற்சி முடிந்ததும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்,
3. பயிற்சிக் காலத்தின்போது உதவித்தொகை வழங்கப்படும்,
4. பயிற்சி முடிந்ததும் நீர் விரும்பின் தொழில் வாய்ப்பும் அளிக்கப்படும். சம்பளம் 1500 ரூபா முதல் 3500 ரூபா வரை வழங்கப்படும்.
5, உமக்கருகிலுள்ள பேக்கரி உரிமையாளரின் நற்சாட்சிப்பத்திரம் ஒன்று இணைத்தல்வேண்டும்,

# கோதுமைப் பண்டங்கள்

நீங்கள் விரும்பும்

- பணிஸ் வகைகள்
- கேக் வகைகள்
- பிஸ்கட் வகைகள்
- கிறீம் சிலைஸ்
- டோனட்
- பேஸ்டி

இன்னும் கோதுமை மாவில் தயாராகும் மேலைத்தேய உணவுகள் யாவும் சுத்தம், சுகாதாரம், சுவை என்பவற்றுடன் செய்து கொடுக்கப்படும்.

★ குரக்கன் பாண் ★
ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

தரத்தின் சின்னம் தினேஷ் பாணகம்

# தினேஷ் பாணகம்

(சி/4387)

சந்தைச் சதுக்கம் — மானிப்பாய்

## சிந்தனைக்கு

ஒவ்வொரு சோதனையும் நமக்கு வளமான பயனான படிப்பினை ஒன்றைப் போதிக்க விருக்கிறது - நாம் மட்டும் அதைக் கற்கச் சித்தமாயிருந்தால்.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 09-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2389 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 93

## பாவனைக்குதவா உணவுப் பொருள்கள்

"காங்கேசன் துறைமுகத்திற்கு ஊடாக எடுத்து வரும் உலர் உணவுப் பொருள்கள் பாவனைக்குதவாதவை" என யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், பழுதடைந்து, பாவனைக்கு உதவாத பொருள்கள் வடக்கே அனுப்பி வைக்கும் முதலாவது சம்பவமல்ல இது. இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலுமாகும் கடந்த வருடம் இன்றிருப்பதை விட உணவுப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவும் போதும் சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறே பழுதடைந்த உணவுப் பொருள்களை, வடக்கே அனுப்பவைத்தது.

போக்குவரத்து, மருத்துவசேவை, சுகாதாரநிலை போசாக்கு என்பன வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையில் பாவனைக்கு உதவாத பொருள்களை அரசாங்கம் அனுப்புவதினால், மக்கள் மேலும் மேலும் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் பெரும் துன்பத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

ஆனால், இப்பழுதடைந்த உணவை அனுப்புவதன் மூலம் சிறிலங்கா அரசாங்கம் தனது பல இலக்குகளை நிறைவேற்றிக் கொள்கிறது. பழுதடைந்த இப்பொருள்களை அனுப்பி விட்டு வடக்கிற்கு போதிய அளவு உணவு அனுப்பப்படுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்ய ஏதுவாகிறது. இதன்மூலம் சர்வதேச ரீதியான கண்டனத்தைத் தவிர்க்கக் கூடியதாக உள்ளது. இரண்டாவதாக பழுதடைந்து சேதமாக்கி அழிக்க வேண்டிய உணவை விநியோகிப்பதன் மூலம், பெரும் தொகைப் பணத்தை அரசாங்கம் மிச்சப்படுத்துகிறது. மூன்றாவதாக அழிக்கவேண்டிய பொருள்களை விற்று வடபகுதி அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குகிறது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது மிகவும் கண்டனத்திற்குரியதாகும். தமிழரைத்திட்டமிட்டு இனப்படுகொலை செய்வது போன்று தமிழரை நீண்டகாலப் போக்கில் சுகாதார கேட்டினாலும் நோயினாலும் அழித்து விடுவதற்கான திட்டமுமாகும் இதனை தமிழ் மக்கள் அனைவரும் கண்டிப்பதோடு அரச அதிகாரிகளும் பொதுஸ்தாபனங்களும் கண்டிக்கவேண்டும்.

இதேவேளை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு பொருள்களை எடுத்துவரச் செல்லும் அதிகாரிகள் பழுதடைந்த பொருள்களை எடுத்துவருவதைத் தவிர்க்க

# சட்டசபை - பத்திரிகையாளர் மோதல்

# நீதித்துறையின் நிலை என்ன?

தமிழக சட்டப்பேரவைக்கும் அதன் சபாநாயகருக்கும் எதிராக இலஸ்ரேட்டட் வீக்லி இதழின் முன்னாள் பத்திரிகையாளரான கே. பி. சுனில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இரண்டு விடயங்களை எழுப்பியுள்ளது, ஒன்று நீதியற்ற முறையிலும், முறையற்ற வகையிலும், காரணமற்ற வகையிலும் சட்டப் பேரவையினால் தண்டிக்கப்படும் ஒருவர் நீதிமன்றத்தின் உதவியை நாடமுடியுமா? என்பது மற்றது சட்டப்பேரவையின் தன்னிச்சையான செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர் ஒருவரைக் கைது செய்யவேண்டாம்என்று நீதிமன்றம் பிறப்பித்த ஆரம்ப உத்தரவிற்கு சட்டசபை உறுப்பினர்களும், சபாநாயகரும் கட்டுப்பட்டவர்களா? இல்லையா? என்பதுபற்றியது.

இரண்டாவது விடயத்தையே திரு. சுனில் டில்லி நீதிமன்றத்தில் தாக்கல்செய்த தனது மனுவில் பிரஸ்தாபித்துள்ளார். ஏப்ரல் 24 ஆம் திகதியன்று தான் கைது செய்யப்படுதலை இடை நிறுத்தி வைத்த உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை தமிழக சபாநாயகர் நிராகரித்துள்ளமையினை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது சம்பந்தமான விசாரணையை மேற்கொண்ட நீதிபதிகளான எம். என். வெங்கட் செல்லையா, ஆனந்த் மற்றும் பட்நாயக் ஆகியோர் பொலிசாரும் சிவில் அதிகாரிகளும் திரு. கே. பி. சுனிலுக்கு முழுப்பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டுமெனப் பணித்துள்ளனர். 1965 இல் உத்தரப் பிரதேச சட்டப்பேரவைக்கு எதிராக நீதிமன்றம் அளித்த தீர்ப்பொன்றை சுட்டிக் காட்டியுள்ள அவர்கள் இதனையும் அவ்வழியிலேயே அணுகுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இந்திய அரசியலமைப்பின் 144ம் பிரிவின் கீழ் அரசாங்க சிவில் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் நீதிமன்றக் கட்டளைகளுக்கே கட்டுப்பட்டவர்கள் என்பதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் தமது தீர்ப்பில் நீதிமன்றத்தின் கட்டளைகளை ஏற்றுச் செயல்படாத அல்லது நீதிமன்றக் கட்டளைகளை புறக்கணித்து நடக்கும் உள்துறை செயலாளர்கள் உட்பட எந்த தரத்து அதிகாரிகளும் கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகலாம் எனவும் எடுத்துக் காட்டியுள்ளார். இந்த விவகாரத்தில் நீதிமன்றத்திற்கும், சட்டப்

> இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையாளர்.
> -கிருஷ்ன் மகாஜுன்

பேரவைக்கும் இடையே ஒரு முறுகல் நிலை ஏற்பட்டிருப்பது கவலைக்குரியதே. அரசியலமைப்பின் காவலர்களாக இருந்து குடிமக்களின் நலன்களைப் பேணவேண்டிய பொறுப்பு சட்டப்பேரவைக்கும்நீதிமன்றத்துக்குமே இருக்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டங்களுக்கு விளக்கம் அளிக்கும் உரிமை அனைத்தும் நீதிமன்றத்துக்கே உரியது என்று மிகத்தெளிவாகக்கூறியுள்ளது. இவ் உரிமை சட்டப் பேரவைக்கோ பேரவை உறுப்பினர்களுக்கோ வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே இதன்மூலம் சட்டப்பேரவை உறுப்பினர்களின் சிறப்புரிமை என்பது கேள்விக்கிடமில்லாதது அல்ல என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. எனினும் நீதிமன்றம் தான் குறிப்பிட்ட சூழ்நிலையையும் பேரவை உறுப்பினர்களின்சிறப்புரிமையையும்கவனத்திற்கொண்டு செயற்படவேண்டியுள்ளது அதாவதுசட்டப் பேரவை தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்வதாகவும், அடிப்படை உரிமைகளை மறுப்பதாகவும் குடிமக்கள் எவரும் நீதிமன்றத்தில் முறையிட வாய்ப்பு அளிக்கின்றது.

இந்திய அரசியலமைப்பின் 20 'ஏ' பிரிவின் கீழ் சட்டப் பேரவையின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி குடிமக்கள் எவரும் அறிந்து கொள்வது அடிப்படைஉரிமை என்று கூறப்பட்டுள்ளது. குடிமக்களின் இந்த அடிப்படை உரிமை மீறப்படுவதாக குற்றம் சாட்டப்படும்போது நீதிமன்றத்தின் அறிவிப்புகளுக்கு இசைவாகச் செயற்பட வேண்டியது பேரவை உறுப்பினர்களின் கடமையாகின்றது.

அரசியலமைப்பின்கீழ் அமைக்கப்பட்ட இந்த இரு நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் நிலை உருவாகும்போது சட்டப் பேரவை உறுப்பினர்கள் நீதிமன்றத் தீர்ப்புகளை பலப்படுத்தும் வகையிலேயே செயற்படல் வேண்டும்.

நீதிமன்றம் இந்த விவகாரத்தில் பத்திரிகையாளருக்கு சார்பாக இருக்குமா? எதிராக இருக்குமா? என்பதை விடவும் நாட்டு மக்களுக்கு ஒரு பொது நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்லும் பத்திரிகையாளர்களின் கடமையைத் தடுக்காது என்று நம்பலாம்.

நன்றி:-
அகில இந்திய வானொலி

## ரஷ்ய படைத் தளபதியாக பொரிஸ்யெல்சின்நியமனம்

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் ரஷ்ய ஆயுதப் படைகளை உருவாக்குவதற்கான உத்தரவுப் பிரகடனமொன்றை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள இந்த பிரகடனத்தின் படிபொரிஸ் யெல்சின் ஆயுதப்படைகளின் தற்காலிக பிரதமதளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல் தற்காலிக பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி ஆற்றி வரும் யெல்சின் பாதுகாப்புத் தொடர்பான இச்சட்டம் அறிமுகப்படுத்தப்படும் வரை ஆயுதப் படைகளுக்கும் பொறுப்பாக இருப்பார். ரஷ்யாவின் முதலாவது பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் பவல் குருச்சேவ் இராணுவத்தின் அன்றாட நிர்வாக அலுவல்களுக்குப் பொறுப்பாக இருப்பார். இவரிடம்ஒரு மாத காலத்திற்குள் இராணுவத்திற்கான விதிமுறை பிரகடனத்தையும் வரவு செலவுத் திட்டத்தையும் தயாரிக்கும் படி ஜனாதிபதி யெல்சின் தனது பிரகடனத்தில் கேட்டுள்ளார்.

## 360 மைல் கார் செலுத்திய 6வயது சிறுவன்

(சென்னை)

முந்நூற்றி அறுபது மைல் தூரம்கார் செலுத்தி ஆறு வயது இந்தியச் சிறுவன் ஒருவன் சாதனை புரிந்துள்ளார் என பி.ரி.ஐ குறிப்பிட்டுள்ளது.

அனுமதிப் பத்திரமின்றி தந்தையின் காரினை இவன் ஓட்டிச் சென்றான் என்றும் இவனுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லொஸ் ஏஞ்சல்ஸ் இனக்கலவரம்

## அமெரிக்கா மீது விசாரணை; ஐ.நா.விடம் ஈராக் முறையீடு

(நியூயோர்க்)

லொஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் அமெரிக்க நகரங்களில் பரவலாக நடைபெறும் இரத்தம் சிந்தும் இனக்கலவரங்கள் பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபை விசாரணை மேற்கொள்ளவேண்டுமென ஈராக் எழுத்துமூலம் கேட்டுள்ளது.

உலகைச் சுற்றி மனித உரிமைகள் பற்றிப் பேசி மார்தட்டும் அமெரிக்கா அதன் உள் விவகாரங்களில் அவ்விதம் நடந்து கொள்வதில்லை என்றும்,

### பழனி தொகுதியில்

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு மக்களை சந்திக்க தயக்கம்!

-- ஆலடி அருணா

(சென்னை)

ஆனால் ஆலடி அருணா

### இடமாற்ற உத்தரவுக்கு

## பணியாத ஆசிரியருக்கு சம்பளம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பிலும் இதர நகரப் பகுதிகளிலுமுள்ள பாடசாலைகளில் மேலதிகமாகப் பணி புரியும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் புதிய இடங்களில் அவர்கள் தமது கடமையைப் பொறுப்பேற்காதவரை அவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட மாட்டாது.

இதற்கான பணிப்புரையை கல்வி அமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள ஜனாதிபதி ஆர் பிரேமதாசா விடுத்துள்ளார்

கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற உயரதிகாரிகள் மாநாட்டில் இப்பணிப்புரை வழங்கப்பட்டது.

மாகாணரீதியில் நகர்ப்பகுதி பாடசாலைகளிலுள்ள மேலதிக ஆசிரியர்கள் தொடர்பான விபரங்களையும் கல்வியமைச்சு திரட்டுகின்றது.

### இடம் பெயர்ந்த மக்களின்

## போசாக்கு நிலையை மேம்படுத்த முயற்சி

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின்போசாக்கு நிலையை மேம் படுத்துவதற்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்முயற்சி எடுத்துள்ளது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நடாத்தப்பட்ட ஆய்வு இருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு அறிவித்திருக்கிறார். இதனை விற்பனை செய்வதற்கு யாழ். செயலகம் தயாராக உள்ளது. இவற்றை கொள்வனவுசெய்து போசாக்கு குறைந்த மக்களிற்கு வழங்குவதற்கு அரச சார்பற்றநிறுவனங்கள்முயற்சி

வேண்டும் பழுதடைந்த உணவைக் கொண்டுவருவதன் மூலம் நோயையும் சுகாதாரக் கேட்டையும் கொண்டு வருகிறோமே ஒழிய உணவைக் கொண்டுவரவில்லை என் பதையும் உணர வேண்டும்.

காங்கேசன்துறைத் துறைமுகம் இராணுவத்தின ரின் கட்டுப்பாட்டில் இருப்பதினால் உணவு இறக்கி ஏற்ற காலதாமதம் அதிகரிக்குமானால், காங்கேசன் துறை துறைமுகத்தைத் தவிர்த்து பருத்தித்துறை துறைமுகத்தை முழுமையாகப் பயன்படுத்திட முயற் சிக்க வேண்டும். அல்லது காங்கேசன்துறை துறைமுகத் தில் இறக்கப்படும் உணவுப் பொருள்களை விரைவா கக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண் டும். இதைவிடுத்து உணவு கிடைக்கின்றது என்ற ரீதி யில், காங்கேசன் துறையில் இருந்து பழுதடைந்த உணவு வகைகளை பெற்றுக் கொள்வது நெருக்கடியை அதிக ரிக்குமே ஒழிய குறைக்கப் போவதில்லை.

யாழ். மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக பெரிய அளவிலான அரச உணவுக்களஞ்சியங்கள் பல அழிக்கப்பட்டுவிட்டன. சிறியளவினதான குறைந் தளவு உணவுக்களஞ்சியங்களையே தற்பொழுது செயலகங்கள் பாவித்துவருகின்றன. இந் நிலையில், காங்கேசனில் இருந்து கொண்டுவரப்படும் பழுதடைந்த உணவுப் பொருள்களால் இக் களஞ்சியங்கள் நிரப்பப் படுமானால் நல்ல நிலையில் உள்ள உணவுப் பொருள் களை சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இது எதிர்காலத்திலும் தொடர்ந்தும், பழுதடைந்த பொருள்களையே விநியோகிப்பதற்கான சூழ் நிலையை உருவாக்கிவிடக்கூடும்.

இந்நிலையில், பழுதடைந்த உணவுப் பொருள்கள் தொடர்பாக அரசஅதிகாரிகள் தீவிர அக்கறை காட்ட வேண்டும். இவ்விடயத்தில் சில அதிகாரிகள் தீவிர கவ னம் செலுத்துவதாக தெரியவருகின்ற வேளையில் சில அதிகாரிகள் இப்பழுதடைந்த பொருள்களை மக்களின் தலையில் கட்டிவிட முயற்சிப்பதாகவும் தெரிகிறது. பழுதடைந்த பொருட்களை இலவச நிவாரணங்களுக்கு வழங்கிவிடும்படி அதிகாரிகள் சில பலநோக்கு கூட்டுற வுச் சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அறியமுடி கிறது. அதை வலியுறுத்துமாப்போல் ப நோ. கூட்டு றவுச் சங்கங்களிலும் தாராளமாக பழுதடைந்தஉணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மக்கள் முறைப்பாடுகள் செய்துள்ளார்கள். இது வன்மையான கண்டனத்திற்குரியதாகும். அதிகாரிகளும், ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களும் பழுதடைந்த உணவுப் பொருள் களை மக்களிடம் நிவாரணம் என்ற போர்வையில் தள்ளி விட முயற்சிக்கக் கூடாது. ஏனெனில், நிவார ணம் பெற மக்கள் உரிமையுடையவர்கள் என்பதினா லேயே நிவாரணம் அரசால் வழங்கப்படுகிறது.

(சென்னை)

தேர்தல் ஒன்றை எதிர் நோக்க தமிழக அரசு தயங்கு வதாலேயே பழனி மக்களவை இடைத்தேர்தல் காலவரை யறையின்றி ஒத்திப்போடப் பட்டுள்ளதாக திராவிட முன் னேற்றக் கழக பேச்சாளர் ஆலடி அருணா கண்டனம் செய்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுபழனி இடைத்தேர்தலை ஒத்திவைத் தது குறித்து வெளியிட்ட அறிவிப்பினை அடுத்து ஆலடி அருணா இக் கண்டன அறிக் கையை வெளியிட்டுள்ளார்.

சில பகுதிகளில் நிலவும் கடு மையான வரட்சி நிலை கார ணமாக இடைத்தேர்தலை நடத்துவது சிரமமாக இருக் கும் என்று மாநில அரசு அறி வித்ததாலேயேஒத்திப்போடப் பட்டதாக தேர்தல் ஆணைக் குழு அறிவித்திருந்தது.

ஆனால் ஆலடி அருணா இதனை கண்டித்துள்ளார் தேர்தல் ஏற்பாடுகள் முறை யாகச் செய்யப்பட்டு வேட்பு மனு தாக்கல் செய்யப்படும் நாளில் இடைத்தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பது ஜனநா யகவிரோத செயலாகும் என் றும்;

தமிழகத்தைப் பொறுத்த வரை குடிநீர்ப் பிரச்சினை, மின்வெட்டுப் போன்றவை வழக்கமான கோடைகால பிரச்சினைகள் தான் என்றும் தேர்தல் ஒத்திவைக்கப்படுவத ற்கு வரட்சி என்பது உண்மை யான காரணமல்லவென்றும்,

விலைவாசி ஏற்றம் பல் வேறு கட்டண உயர்வுகள் பத்திரிகைச் சுதந்திர அச்சுறுத் தல் ஆகியவை காரணமாக தேர்தலை அரசு சந்திக்க தயங் குகின்றது என்றும் தெரிவித் துள்ளார்.

## பத்திரிகையாளர் விவகாரம்

# உத்தரவு புறக்கணிப்பு பற்றி உயர் நீதிமன்றம் எச்சரிக்கை

(சென்னை)

இலஸ்ரேட்டர் வீக்லியின் முன்னாள் செய்தியாளர் கே. பி. சுனிலுக்கு எதிராக தமி ழக சட்டப் பேரவைத் தலை வர் சேடப்பட்டி முத்தையா விடுத்திருக்கும் 'பிடிவாற ண்டை' நிறுத்திவைக்குமாறு தாம் முன்பு கொடுத்திருந்த உத்தரவை வேண்டுமென்றே புறக்கணிப்பது குறித்து உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் சென்னையிலும், புதுடில்லியி லும் உள்ள சிவில் மற்றும் காவல்துறை அதிகாரிகளை எச்சரித்துள்ளது.

சென்ற மாதம் 24 ஆம் திகதி கொடுக்கப்பட்ட தடை உத்தரவிற்கு எதிராக செயல் படும் எந்த முயற்சியும் நீதி மன்றத்தை அவமதிப்பதாகும் என்றும் நீதிமன்றம் தெரிவித் துள்ளது.

நீதிபதிகள் என். வெங்கட செல்லையா, கே. எஸ். ஆனந், ஆர். சி. பட்நாயக் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் இந்த உத்தரவை விடுத்துள் ளது.

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் தமக்கு எதிராக வெளியிட்டுள்ள கைது வார ண்ட் உத்தரவுகளை நிறை வேற்றுவதில் தமிழகத்தைச் சேர்ந்த பொலிசாருக்கு உத விட வேண்டாமென்று டில்லிப் பொலிசாரைப் பணித்திடு மாறு கே. பி சுனில் தமது மனுவில் கேட்டிருந்தார்.

ந்து கொள்வதில்லை என்றும்,

கறுப்பு நிற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள மக்கள் கொடுமைக்குள்ளாகின்றார் கள். அப்பாவி மக்களுக்கு எதி ராக துப்பாக்கி அடக்குமுறை கையாளப்படுகிறது. கறுப்பு இன மக்களின் சமுதாய பொருளாதார நலன்களைக் கவனியாது அவர்களை ஒதுக் குவதில் அமெரிக்க அரசாங் கம் ஈடுபட்டுள்ளது என்றும் ஐ. நா. சபைக்கான ஈராக் கிய தூதுவர் சமீர் அல்நிமா ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு அறிவித்துள் ளார்.

ஈராக் குர்திஷ் சிறுபான்மை யினருக்கு எதிராக பாரபட் சம் நடக்கிறது எனக் கூறும் அமெரிக்காவிற்கு எதிராக விசாரணை நடைபெற வேண் டுமெனவும் ஈராக் ஐ. நா, பாதுகாப்புச் சபையைக் கேட் டுள்ளது.

# போலிச் சாராயம் அருந்தி 29 பேர் பலி

(புவனேஸ்வர்)

ஒரிசா மாநிலத்தில், கடந்த புதன்கிழமை போலிச் சாரா யம் அருந்தியதனால் இரண்டு பெண்கள் உட்பட 29 பேர் உயிர் இழந்துள்ளனர் என்று ஒரிசா மாநில பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்களைவிட 35 பேர் ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளனர் என்றும்,

போலிச் சாராயம் காய்ச் சியது தொடர்பாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்றும், மூவாயிரம் லீற்றர் சாராயமும் கைப்பற் றப்பட்டது என்றும் பொலி சார் தெரிவித்தனர்.

களில் நடாத்தப்பட்ட ஆய்வு களில் இருந்து இம் மக்களின் குறை நிலையான போசாக்கு மட்டம் தெரிந்து கொள்ளப் பட்டதன் பின்னரே இந்த முயற்சி எடுக்கப் பட்டிருக்கி றது.

யாழ். செயலக [illegible]ணர்வாழ் வுப் பகுதியிடம் போதியளவு பால்மா மற்றும் உணவுப் பொருள்கள் கையிருப்பில் [illegible] சார்பற்றநிறுவனங்கள்முயற்சி எடுத்து வருகின்றன.

இவ் விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக அரச சார் பற்ற நிறுவனங்களின் இணை யத்தின் விசேட பொதுக் கூட் டம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. இக்கூட்டத் தில் மேற்படி திட்டத்தைநடை முறைப்படுத்துவதற்கு முடி வெடுக்கப்பட்டது. [க]

## அவசரகாலச் சட்டம்

# பத்திரிகைகளுக்கு எதிராய் பயன்படுத்தக் கூடாது

-- விக்கிரமரட்னா

[கண்டி]

அவசரகாலச் சட்டத்தை தேசிய பாதுகாப்பு போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்த லாம்ஆனால்பத்திரிகைகளுக்கு எதிராகப் பயன் படுத்தக் கூடாது என்று கண்டி மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலை வர் விஜெய விக்கிரமரெட்னா சபையின் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுப்பதை நிறுத்தும் படி கோரும் தீர்மா னத்தைச் சமர்ப்பித்துப் பேசும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின்சாதாரண சட்டத் தின் கீழ் பத்திரிகை மீது வழக் குத் தொடர வசதியிருக்கும் போது அரசாங்கம்ஏன் அவசர காலச் சட்டத்தைப் பயன் படுத்த வேண்டும் என்று அவர் கேட்டார்.

அரசுக்குச் சொந்தமாக வானொலி, தொலைக்காட்சி மற்றும்பத்திரிகைகள்உள்ளன; ஆனால் மக்களைப் பொறுத்த வரையில் தங்கள் கருத்தை வெளியிடும் சுதந்திரம் மறுக் கப் பட்டுள்ளது பத்திரிகைச் சுதந்திரம் நாட்டில் உள்ளது என்றும் சொல்லும் அதே வேளையில் பத்திரிகைகளின் கழுத்தைப் பிடித்து நசிப்பது போலாகும் என்றார் அவர்.

# நோர்வே அதிகாரிகள் மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா-நோர்வே தரப்பு விவகாரங்களை ஆராய்வதற் காக நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழு வொன்று கொழும்பு வந்துள் ளது. வட-கிழக்கில் மனித உரிமை விவகாரங்கள் குறித் தும் இக் குழு ஆராயும்.

இக் குழுவில் வந்துள்ள நோர்வே மனித உரிமைகள் குழுவின் ஆலோசகர்களான கக்கோன் பி. மிஜெல்ட், பெரிட், பிளேவை நீல் ஹவுஸ் ரிப்பெப்ட் ஆகியோர் கடந்த புதனன்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தனர்.

# ஈழநாதம்

## லங்கா சீமெந்து லிமிட்டெட் இயங்கவைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ முற்றுகைக்குள்ளாகியிருக்கும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீண்டும் செயற்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் இத்தொழிற்சாலையின் கட்டடங்கள், வாகனங்கள், இயந்திர சாதனங்கள் அனைத்தும் பலத்த சேதத்திற்குள்ளாகியிருந்தமை தெரிந்ததே,

தற்போது முதலில் இத்தொழிற்சாலையின் இடர்ப்பாடுகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்படவிருப்பதுடன் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு களஞ்சியப் பகுதியில் பொருட்கள் பட்டியல் படுத்தப்படவுள்ளன.

இப்புனரமைப்பு வேலையைச் செய்ய விரும்பும் லங்கா சீமெந்து தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தாமாக முன்வந்து வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இருபத்தைந்து வீத சம்பளமும் உணவும் தங்குமிட வசதிகளும் வழங்கப்படவுள்ளதாக லங்கா சீமெந்து உதவி பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## நான்கு மாதச் சம்பளம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் நெசவுப் போதனாசிரியர்களாகப் பணியாற்றும் சேவை நீடிப்பாளர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்படுகிறது

## 100 அராலி குடும்பங்களுக்கு இரு வாரங்கள் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் அராலியில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் அராலியைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்களுக்குத் தற்பொழுது இரண்டு கிழமைகளுக்கு நிவாரணம் வழங்க யாழ் அரசஅதிபரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட 100 குடும்பங்களைச்சேர்ந்த மக்கள் கடந்த மாதம் தமக்கு நிவாரணம் வழங்கக் கோரி யாழ் செயலகத்தில் திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் தமது கஷ்டங்கள் பற்றி முறையிட்டமை தெரிந்ததே. இதனையடுத்தே யாழ் அரச அதிபரின் சிபார்சில் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. (பா)

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று அல்வாய் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பிற்பகல் 3 30 மணிக்கு யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப் நடைபெறவுள்ளது.

## விசர் நாய் கடித்து மரணம்

(யாழ்ப்பாணம்)

சுமார் ஓராண்டுக்கு முன்னர் விசர்நாய்க்கடிக்கு இலக்கானவர் யாழ் போதனாவைத்தியசாலையில் மரணமானார்.

மாசியப்பிட்டியைச் சேர்ந்த நல்லதம்பி(வயது 65) என்பவரே மரணமானவராவார். இவர்ஓராண்டுக்கு முன்னர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி தகுந்த சிகிச்சை பெறாததாலேயே மரணமானார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## காங்கிரஸ் தலைவர்களுக்கும் ராஜீவ் கொலைக்கும் தொடர்பு

### வர்மா கமிசன் தீவிரவிசாரணை

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கும் இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பாக ஆராய்ந்து வரும் இரு கமிசன்களில் ஒன்றான வர்மாகமிசன் தற்பொழுது தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதாக சென்னையில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இக் கொலை தொடர்பாக தமிழக பொலிஸ் அதிகாரிகளையும் பல கட்சிகளையும் வர்மா கமிஷன் விரிவாக விசாரித்த பிறகும் இதுவரை கமிஷன் ஒரு முடிவிற்கும் வராமலிருக்கிறது. ஆனால் பாதுகாப்பு விதிமுறைகள் சரிவர கடைப்பிடிக்கப்படவில்லை என்று இதுவரையிலும் கிடைத்த பல ஆதாரங்கள் காட்டுவதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன கமிஷன் விசாரித்தவர்கள் பட்டியலில் கபினெட் செயலக செயலர் ஐ பி. மற்றும் சி. பி. ஐ இயக்குனர்கள் சென்னை, டில்லி காவல் துறை கமிஷனர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

இதேவேளை விசாரணையில் இதுவரையிலும் கிடைத்த ஆதாரங்கள் இந்திரா காங்கிரசிற்கு பாதகமாக இருப்பதாகத் தெரியவருகிறது. இந்திரா காங்கிரஸ் ஊழியர் லதா கண்ணனையும் அவருடைய மகள் கோகிலாவையும் கூட்டத்திற்கு அழைத்துவந்தது இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. லதாபிரியகுமார் என்று இந்திரா காங்கிரஸ் ஊழியர் குமுதவல்லி குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் அவர் குண்டுவெடித்தவுடன் அந்த இடத்தில் இருந்து முதலில் ஓடியவர்கள் எஸ். பி. மாத்தார் மற்றும் மரகதம் சந்திரசேகர். அவருடைய மகள் லதா பிரியகுமார் ஆகியோரே எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனால் மாநிலப் பொலிஸிற்கும் பெரும் தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தப் படுகொலைச் சதிக்கும், இந்திராகாங்கிரஸ் தலைவர்களுக்கும் ஏதாவது தொடர்புண்டா என கமிஷன் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளது.

## தமிழக அரசாங்கம் பத்திரிகைகளை மதிக்கிறது

### -சேடப்பட்டி முத்தையா

(சென்னை)

பத்திரிகைச் சுதந்திரத்தை ஒடுக்க தமிழக அரசு முயல்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என்றும், அரசு பத்திரிகைகளை மதித்து நடக்கின்றது என்றும் தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் உரையாற்றிய அவர் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை இழிவு படுத்துவோர் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று குறிப்பிட்டார்.

## கலை, பண்பாட்டுக் கழகம் நன்றி தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் 2. 5. 92 தொடக்கம் 6. 5. 92 வரை நடாத்தப்பட்ட ''தமிழிசை விழா'' நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு விழாவில் பங்குகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளது

இதில் கலந்து கொண்ட இசைக் கலைஞர்கள் விழாச் சிறப்படைய வாழ்த்துச்செய்தி அனுப்பியோர் வாழ்த்துக் கவிதை எழுதியவர்கள் இவ்விழா பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த பிரசுரித்த பத்திரிகைகள், புலிகளின்குரல் வானொலி, போக்கு வரத்து மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்ட தமிழீழகாவல்துறையினர் விழாவில் சகல வழிகளிலும் தோளோடு தோளாக துணை நின்று உழைத்தவர்கள் மற்றும் விழாவுக்கு சமுகமளித்தமக்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நன்றி தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளது.

### யுத்தம்

புக்காகசெலவிட்டுவருகின்றது புரையோடிப் போயிருக்கும் இப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியது அரசின் பொறுப்பாக இருந்தாலும் எல்லோரினது கவனத்திற்கும் ஈர்க்கப்பட வேண்டியதாகும். இதன் பொருட்டுதர்க்க பூர்வமான முன்னேற்பாடுகள் பலராலும் முன்வைக்கப்பட்டுள்

## அகதிகள் விரும்பி வராவிட்டால் நிதி உதவி தாமதமாகும்

### உதவி வழங்குவோர் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வரும் தமிழ் அகதிகள் தாமாகவே மனம் விரும்பி வரவில்லையானால் அகதிகள் மறுவாழ்வுக்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படும் என்று உதவி வழங்கும் நாடுகளின் முகவர்கள் சிறிலங்கா அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது என்று நேற்றிரவு பி.பி சி. கூறியது இதே வேளை பி. பி சி. யின் கொழும்பு முகவர் கிறிஸ்தோப்பர் மொறிஸ் இந்தியாவிலிருந்து அகதிகள் தாமாகவே விரும்பி இலங்கைக்கு வரவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலே இந்து வந்துள்ள பலரதும் வாக்கு மூலங்களிலிருந்தே தெரியவருவதாகக் கூறியுள்ளார்.

மேலும் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் தாமாகவே விரும்பி வந்ததாகக் கூறப்பட்டபோதிலும் தற்போது அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கும் தகவல்கள் அத்தகைய நிலை இருப்பதை எடுத்துக் காட்டவில்லை என்றும்,

தமிழகத்தில் அகதிகள் முகாம்களின் மீது பொலிஸ் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகவும், நிவாரண உதவிகள் மற்றும் சலுகைகள் இடைநிறுத்தப்படுவதாகவும் தெரியவருகிறது,

## 25 தங்க சங்கிலிகள் கடத்திய இந்தியர் கைது

(கொழும்பு)

இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான 25 தங்கச் சங்கிலிகளைக் கடத்த முற்பட்ட இந்தியத் தம்பதியினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் சிங்கப்பூர் விமானமொன்றில் கட்டுநாயக்கா வந்தனர் இவர்கள் மீது சந்தேகம் கொண்ட அதிகாரிகள் பெட்டியை சோதனை செய்த போது இச் சங்கிலிகளைக் கண்டுபிடித்தனர் என்றும்,

இவர்களுக்கு 5,53,065 ரூபாவை அபராதமாக விதித்த சுங்க அதிகாரிகள் சங்கிலிகளையும் பறிமுதல் செய்தனர்.

### பயணி

துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இச் சம்பவத்தின் போது இரத்தினதுரை (34) என்ற இறம்பைக்குளம் வாசி காயமடைந்தார்.

இவரை, சர்வதேச செஞ்

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு நாளை மணிவிழா

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் மணிவிழா நிகழ்ச்சி நாளை (10-05-92) பிற்பகல் 3 00 மணியளவில் பேராசிரியர் செ சிவஞான சுந்தரம் (நந்தி)

சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் வண. ஜி. ஏ. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் வழங்க உள்ளனர் அதைத்தொடர்ந்து

## கணவரைப் பார்வையிட சுப்புலட்சுமிக்கு அனுமதி

'தடா'ச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட முன்னாள் மாநில அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தனது கணவரை வாரத்தில் இரு நாட்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மருத்துவமனையில் இருக்க இவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவருக்கான அனுமதியை சிறப்பு நீதிபதி எஸ்.எம். சித்திக் வழங்கியிருந்தார்.

## வளைகுடா யுத்தத்திற்கு 6,100கோடி செலவு

(வாஷிங்டன்)

வளைகுடா யுத்தத்துக்கு ஏற்பட்ட செலவான6.100 கோடிடொலர்களில் மேற்கு நாடுகளும் வளைகுடா நாடுகளும் உறுதியளித்திருந்த பணத்தைப் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 730கோடிடொலர் அமெரிக்க வரியிறுப்பாளர்களின் பங்கும் உள்ளது.

450 000அமெரிக்கத்துருப்புக்களையும் லட்சக்கணக்கான தொன் இராணுவ ஆயுதங்களையும் அனுப்பியசெலவுகளுக்கு 5 370கோடிடொலர்களை நேசநாடுகள் செலுத்தி

கோடிடொலரும் ஜப்பான் 1000கோடிடொலரும் ஜெர்மன்650 கோடிடொலரும் ஐக்கிய அராபியக் குடியரசு 410கோடிடொலரும் தென்கொரியா25கோடியே10லட்சம் டொலரும் கொடுத்துள்ளன ஏனையநாடுகள் 2கோடியே90லட்சம் டொலர்களை கொடுத்துள்ளன.

### தாதி மீது

சிங்களவர்கள் அவரைப் பின்னர் தாக்கியதாகத் தெரியவரு

ராலும் முன்வைக்கப்பட்டுள் ளன.


மேலும் பல்வேறு தொழில் துறைசார்ந்தோரும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைப்பதனையே பெரிதும் ஆதரிக்கின்றார்கள் அரசின் நோக்கமும் அதுவே ஆகும் எனவும் தெரிவித்தார்.

இவரை, சர்வதேச செஞ் சிலுவைச் சங்க வாகனம் ஏற் றிச் சென்று வவுனியா அர சாங்க வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தது

காயமடைந்தவர் ஆபத் தான நிலையைத் தாண்டி விட்டார் என்று அறியப்பட் டது. (தி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சுப்பையா பரமநாதன்



தோற்றம் 30-08 48

மறைவு 11 04 91

திதி 09 05-92

ஆண்டொன்று பறந்ததையா, நம் கண்ட கனவெல்லாம் கனவாக,
ஆற அமர்ந்து எமையெல்லாம் அன்புடனே முத்தமிட நீங்கவில்லை எம்முடனே,
என்ற துயர் வாட்டுதையா எமையெலாம்
ஆண்டொன்று ஆனாலும் பல்லாண்டு போனாலும்,
எப்படித்தான் யாம் மறப்போம் தம் இனிய உணர்வுகளை?

அணையாத் தீபமாக விளங்கும் எம் அன்புத் தெய்வத்தின்,
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

பாசமிகு,
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
பேறாமக்கள், மருமக்கள்

(சி/2556)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்ம் மே மாதம் 9ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தனர்.

### தாயகம்

தெரியாத குழுவினர் ஆண், பெண்களை கொடூரமாகத் தாக்கி அவர்களை அச்சுறுத்து கின்றனர் என்று அம் முகாம்க ளிலிருந்து வெளியேறி வந்த மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம், தற்போதுஅம் முகாம்களில்உள்ள மக்கள் தத் தமது சொந்த இடங்களில் சென்று குடியமர்வதற்கு இரா ணுவம் தடை விதித்திருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டது [தி]

செ சிவஞான சுந்தரம் (நந்தி) அவர்களின் தலைமையில் நல்லை திருஞானசம்பந்த ஆதீ னத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் ஆலயத்திலிருந்து பேராசிரியர் மங்கள வாத் தியத்துடன் அழைத்துவரப்பட வுள்ளார். அதைத் தொடர்ந்து மங்கள இசையும் அதன் பின் னர் ஆசியுரையை சிறில சிறி

### பாலம்

மாவட்டத்திலேயே இடம் பெயர்ந்தவர்கள் அங்கு தங்கு வதற்கு அனுமதி மறுத்துள்ள னர். எனத் தெரிவிக்கப்படுகி றது.

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட

அமரர் ஆறுமுகம் கோவிந்தசாமி அவர்களின்

## அந்தியேட்டி அழைப்பும் 33-ம் நாள் நினைவஞ்சலியும்



அன்னைமடியில்
2.5.1925

ஆண்டவனடியில்
7 4 1992

திதி; ஷஷ்டி 9-5-1992

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

திகரை வீதி,
சங்கானை. (2555)

ளனர் அதைத் தொடர்ந்து தலைமையுரையும் இடம் பெறும்.

பேராசிரியர் அ. துரைராசா தொடக்கவுரையை நிகழ்த்தி பேராசிரியர் சிவத்தம்பி அவர் களுக்குப்பொன்னாடை போர்த் தி கௌரவிப்பார்.

தொடர்ந்து பலரின் உரை நிகழ்ச்சியும் இடம் பெற உள் ளது.

## மானிப்பாய் தம்பதிகள் பொலிஸ் விசாரணையில்

[கொழும்பு]

நுககொடவில் வசிக்கும் மானிப்பாயைச் சேர்ந்த தம்ப திகளை நுககொடப் பொலி சார் விசாரணைக்கு உட்படுத் தியுள்ளார்கள்.

பொலிசுக்கு தெரிவிக்காமல் இவர்கள் தங்கள் வீட்டில் கண வன் மனைவியாக விருந்தா ளிக்குத் தங்க இடம்கொடுத்த குற்றத்திற்காக விசாரிக்கப் படுவதாக பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. விருந்தின ரையும் பொலிசார் விசார ணைக்கு உட்படுத்தியுள்ளார் கள் இவர்களுக்கும் புலிகளுக் கும் தொடர்பு இருக்கிறதா என்பது பற்றிப் பொலிசார் விசாரித்து வருகின்றனர்என்று தெரிவிக்கப்படுகிறது.

## நூலகசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் நடமாடும் நூலக சேவை ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளரின் நலன்கருதியே இந்தநடமாடும் நூலக சேவையை யாழ். போதனா வைத்திய சாலை நலன்புரிச்சங்கம் ஆரம்பித் துள்ளது.

களை நேசநாடுகள் செலுத்தி உள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி பெப்ஹால் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா 1 680 கோடிடொலரும் குவைத்1600

னர் தாக்கியதாகத் தெரியவரு கிறது. இதனைத்தொடர்ந்தே வேலைநிறுத்தம் இடம் பெற் றது,

## 1-ம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்
21-6-1971

தாயக விடியலில்
09 05-1991

### வீர வேங்கை அமல்
(வில்லியராஜா றொபேட்)

தீவகத்தின் வேங்கை அணியில்
நேசமுடன் இணைந்திருந்த
அடலேறு அமல் எம்மைப் பிரிய
கடல் படையின் பீரங்கி காரணமேயானாலும்
திடங்கொண்ட நெஞ்சமுடன்
தொடர்கின்றோம் அவன் பணியே
தேச விடுதலைக்காய்.

தீவக மக்கள்

முகவரி:
60/4, சொலமன் வீதி,
யாழ்ப்பாணம். (2557)